

அமைச்சர் மா.சுப்பிரமணியன் , விழுப்புரம் மாவட்டம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் கட்டண படுக்கை பிரிவினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமையில், விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் து.ரவிக்குமார், திருக்கோவிலூர் சட்டமன்ற உறுப்பினர் முனைவர் க.பொன்முடி, விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் அ.சிவா, விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன் ஆகியோர் முன்னிலையில் 28.01.2026அன்று திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் அரசு அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.






நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் ஒன்றிய, நகர, பேரூர் கிளை, வார்டு கழக அவைத் தலைவர் துணைச் செயலாளர், பொருளாளர், ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள், தொடர்ந்து மூன்று, இரண்டு உறுப்பினர் அட்டை உள்ளவர்கள் குடும்பத்தில் உயர்கல்வி பயிலும் 1243 வாரிசுகளுக்கு ரூ. 2 கோடியே 28 லட்சத்து 90 ஆயிரம் மதிப்பில் முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித்தொகையை நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், மாநில மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில்

# ரூ.4.07 கோடியில் புதிய கட்டடங்கள்!

## முன்னாள் அமைச்சர் க.பொன்முடி, அன்னியூர் சிவா எம்.எல்.ஏ.,

## இரா.லட்சுமணன் எம்.எல்.ஏ. முன்னிலையில் அமைச்சர் மா. சுப்பிரமணியன் திறந்து வைத்தார்!

விழுப்புரம், ஜன. 30-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், விழுப்புரம் மாவட்டம் முண்டி யம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில் ரூ.4.07 கோடி மதிப்பீட்டில் புதிய மருத்துவ கட்டடங்கள் மற்றும் உபகரணங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், தலைமையில், விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் து.ரவிக்குமார் திருக்கோவிலூர் சட்டமன்ற உறுப்பினர் முனைவர் க.பொன்முடி, விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் அ.சிவா, ஆகியோர் முன்னிலையில் 28.01.2026 அன்று திறந்து வைத்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்.

பின்னர் இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது...

முதலமைச்சர் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதோடு, மருத்துவமனைக்குத் தேவையான அனைத்து வசதிகளும் ஏற்படுத்திடும் வகையில் அதிக நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு மருத்துவ கட்டடங்களும் மற்றும் அதிநவீன சிகிச்சைக்கான கருவிகளையும் ஏற்படுத்த அறிவுறுத்தியுள்ளார்கள். அந்தவகையில் முதலமைச்சர் அவர்கள் விழுப்புரம் மாவட்டத்தில் ரூ.36.59 கோடி மதிப்பீட்டில் பல்வேறு மருத்துவ கட்டடங்கள் மற்றும் உயர் மருத்துவக்கருவிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தொடர்நிகழ்வாக, இன்றையதினம் விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.48 இலட்சம் மதிப்பீட்டில் 10 படுக்கைகள் கொண்ட கட்டண படுக்கை பிரிவினை யும், ரூ.11.10 இலட்சம் மதிப்பீட்டில் 20 படுக்கைகள் கொண்ட மனநல அவசர சிகிச்சை மற்றும் மீள் மையத்தினையும், ரூ.72.94 இலட்சம் மதிப்பீட்டில் நுண்கதிர் இயந்திர கருவியினையும் (800Ma Digital XRay), ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் கெடார் ஆரம்ப சுகாதார கட்டடம், ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் கோட்டக்குப்பம் ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் மற்றும் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் டி.எடப்பாளையம் துணை சுகாதார நிலையம் கட்டடம் என ரூ.4.07 கோடி மதிப்பீட்டில் 6 மருத்துவ கட்டடங்கள் மற்றும் உயர் மருத்துவக்கருவிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும், விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில் ரூ.40.05 கோடி மதிப்பீட்டில் 100 படுக்கைகள் கொண்ட அவசர சிகிச்சை பிரிவு கட்டடம், ரூ.12 கோடி மதிப்பீட்டில் மகப்பேறு பிரிவில் 2 கூடுதல் தளங்கள் மற்றும் ரூ.1 கோடி மதிப்பீட்டில் பிணவரை கூடம் விரிவாக்கம் ஆகிய கட்டடப்பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் ரூ.60 கோடி மதிப்பீட்டில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை கட்டடம், ரூ.6.89 கோடி மதிப்பீட்டில் திண்டிவனம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் தாய் சேய் நலப்பிரிவு கட்டடம், ரூ.5 கோடி மதிப்பீட்டில் செஞ்சி அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டடம் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டு விரைவில் திறக்கப்படவுள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் தற்போது பல்வேறு பகுதிகளில் அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டடம், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மகப்பேறு பிரிவு கட்டடம், துணை சுகாதார நிலையங்கள் போன்ற பல்வேறு 16 மருத்துவக் கட்டடப்பணிகள் ரூ.71.95 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. விரைவில் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

முதலமைச்சர் அவர்கள் அனைத்து மக்களும் சிறப்பான சிகிச்சை பெற வேண்டும் என்ற நோக்கத்தில் மருத்துவ துறையில் பல்வேறு கட்டமைப்புகளையும் மற்றும் உயர்ரக மருத்துவ சிகிச்சை கருவிகளையும் ஏற்படுத்தி கொடுத்துள்ளார்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மருத்துவக்கல்வி இயக்ககம் மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஆர்.சுகந்தி ராஜகுமாரி, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை முதல்வர் மரு.மை.லூசி நிர்மல் மெடோனா, இணை இயக்குநர் (நலப் பணிகள்) மரு.ச.சாந்தகுமாரி, விழுப்புரம் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.சா.செந்தில்குமார், மருத்துவ நிலைய அலுவலர் மரு.ரவிக்குமார், விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் செல்வி.சங்கீதா அரசி, விழுப்புரம் மாவட்ட ஊராட்சி குழு துணைத்தலைவர் திருமதி. ஷீலாதேவி சேரன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் திருமதி.மீனா வெங்கடேசன், ஒன்றியக் குழு துணை தலைவர் திருமதி.ஜீவிதா ரவி, ஒன்றிய குழு உறுப்பினர் திருமதி. இளவரசி ஜெயபால், முண்டியம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் சந்திரசேகரன் மற்றும் மருத்துவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

